**சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும்**

**(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B) (பாகம் - 33)**

எந்தச் சிங்கள அரசும் தமிழ் இனத்திற்கு எதையும் தரமாட்டாது என்பது பரவலாக அரசியல்வாதிகளால் பேசப்படுகின்ற விடயம். ஆனால் சந்திரிக்காவோ ரணிலோ இனப்பிரச்சினைக்கு ஏற்ற தீர்வை தரமுற்பட்டபோது அதைச் சாதகமாக்கி இலாவகமாக பெற்றுக்கொள்ள முடியாது போனதுதான் தமிழினத்தின் பரிதாபகரமான நிலைமை. தமிழரசுக் கட்சி தமிழ் காங்கிரசுடன் இணைந்தே தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உருவாக்கப்பட்டது. இணையும்போது சமஷ்டிக் கோரிக்கையும் கைவிடப்பட்டது. இலட்சியத்தைக் கைவிட்ட அல்லது மறந்துபோன இன்னுமொரு சூழ்நிலை நிகழ்வு யுத்த நிறுத்த காலத்தில் புலிகளமைப்பின் செயற்பாட்டில் அமைந்திருந்தது. புலிகள் ஆயுதத்தை ஏந்தியது அதனைப் பயன்படுத்தி உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கத்திலேயாகும். அவ்வாறு இலட்சியக் கனவோடிருந்து செயலாற்றிய புலிகள் அமைப்பு யுத்த நிறுத்த காலத்தில் (2002 – 2006) மேலும் தீவிர போர் பயிற்சிகளில் தம்மை ஈடுபடுத்தி போரிடும் வல்லமையை அதிகரிக்கச் செய்யாது பஜீரோ ஜீப்வண்டி பல்சார் மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களையும் சொகுசு வீடுகளையும் புலிகளமைப்பின் போரிடும் கட்டளைத் தளபதிகளுக்கும் கப்டன்மார்களுக்கும் வழங்கியதன் மூலம் அவர்களின் போரிடும் போர்க் குணத்தை இல்லாதாக்கியது. புலிகள் தமது இலட்சியத்தை மறந்ததினாலேயே இது நடந்தது..
மறந்திராவிட்டிருந்தால் மாவிலாற்றுடன் மாற்றான் படை மண்டியிட்டிருக்கும்.

**ராஜபக்ஷ அரசு**

ஸ்ரீலங்கா கண்காணிப்பு நிலையம் (S.L.M.M.) ரணில் ஆட்சியின்போது டோக்கியோவில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையோடு அம்முயற்சி முற்றுப் பெற்றுவிட்டது எனக் கருதியது. ஏனெனில் சனாதிபதி தேர்தலை அடுத்து ராஜபக்ஷ ஆட்சி ஆரம்பித்ததுமே 2005 மார்கழியில் புலிகள் மீண்டும் கொரில்லா பாணியில் தாக்குதல்களை கூடுதலாக வடக்கில் ஆரம்பித்தது. இடையிடையே கிளைமோர் தாக்குதலும் நடத்தி அதனால் 150 படையினர் மட்டில் இறக்கவும் நேர்ந்தது. ஆயிரக் கணக்கான போராளிகளுடன் பிரிந்து சென்ற கருணா கிழக்கில் தமிழீழ மக்கள் விடுதலைப்புலிகள் என்ற அமைப்பை உருவாக்கினார். அந்த அணியுடனான புலிகளின் மோதலும் இடம் பெற்றுக் கொண்டிருந்தன. மேலும் கடற்பிராந்தியத்திலும் நேவிக்கெதிராக கடற்புலித் தாக்குதல்களும் இடம் பெற்றிருந்தன. யப்பான் அமெரிக்கா ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகள் மீண்டும் அரசு–புலிகள் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தன. சனாதிபதியாக பதவி ஏற்ற ராஜபக்ஷாவும் தான் பிரச்சினையை தீர்வுக்கு கொண்டு வருவதற்கு பேசத்தயார் என அறிவித்தார். இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டிருந்த புலிகளமைப்பு படையினரைத் தாக்குவதும் பின் பேசத்தயார் என்று கூறுவதும் என மாறிமாறி தங்களது நிலையற்ற செயற்பாட்டை வெளிக்காட்டி வந்தார்கள். ஒரு கட்டத்தில் புலிகள் அமைப்பு ராஜபக்ஷ அரசுடன் பேச முன்வந்ததால் அதற்கான முதற்சுற்று பேச்சுவார்த்தை சுவிட்சர்லாந்து ஜெனிவாவில் 2006ம் ஆண்டு மாசி 22ம் 23ம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியது. அரசு தரப்பில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, பேரியல் அஷ்ரப், ஜெயராஜ் பெர்ணான்டோபிள்ளை, ரோஹித்த போகொல்லாகம ஆகியோரும் பொலிஸ் மாஅதிபர் சந்திரா பெர்ணான்டோ, டொக்டர். பாலித்த கொகன, சனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி சில்வா ஆகியோரும் உதவிக்கு அரச அதிகாரிகள் முப்படையைச் சேர்ந்த

அதிகாரிகள் ஆகியோர்களையும் கொண்டதான பிரதிநிதிகளும், புலிகள் தரப்பில் அன்ரன் பாலசிங்கம், தமிழ்செல்வன், அடேல் பாலசிங்கம், நடேசன், புலித்தேவன், ஜெயம், மாஷல் ஆகியோரும் பங்குபற்றியிருந்தார்கள். யுத்த நிறுத்த நான்கு வருட காலத்தில் புலிகளினால் 5464 அத்துமீறல்கள் இடம்பெற்றுள்ளது என்ற அரசின் குற்றச்சாட்டை மறுத்து துணைப்படையணிகளின் (Para military group) செயற்பாடுகளை தங்கள்மேல் சுமத்துவதாக அன்ரன் பாலசிங்கம் கூறியிருந்தார். அந்தப் பேச்சுவார்த்தையில் உயர் பாதுகாப்பு வலயக் காணிகள், புலிப்படையில் சேர்க்கப்பட்ட சிறுவர்களை விடுவித்தல், அகதி முகாம்கள், காணாமல் ஆக்கப்படுதல், சட்டரீதியற்ற கைதுகள் போன்று வேறும் விடயங்கள் ஆராயப்பட்டன. அடுத்த சந்திப்பு 2006 சித்திரை 24ம் 25ம் திகதிகளில் என வகுத்து இருந்தும் அதில் புலிகள் பங்குபற்றாது இராணுவத் தளபதியாக அன்றிருந்த சரத் பொன்சேகாவை குறிவைத்துக் கொல்லும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். 21.07.2006 அன்று தங்கள் வசமாகவிருந்த மாவிலாறு குளத்தின் சுலூஸ் கதவுகளை அடைத்து நீர் வெளியேற முடியாதவாறு பூட்டிவிட்டார்கள். இதுவே யுத்தம் ஆரம்பிப்பதற்கு போடப்பட்ட பிள்ளையார் சுழி.

**சோதனைகளும் வேதனைகளும்**

இந்தக்கால கட்டத்தில் (2006) ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) எந்தக் கட்சியும் கூடிய கவனம் செலுத்தாதிருந்த ஒரு முயற்சியில் இறங்கியது. உயர் நீதிமன்றத்திற்கு மனுக்கள் சமர்ப்பித்து கிழக்கு மாகாணம் வடக்கோடு இணைத்திருப்பது சட்டரீதியற்றது என்றும் அவை தனித்தனியாக பிரிக்கப்பட்டு கிழக்கு தனி மாகாணசபை கொண்டதாக இருக்கவேண்டும் என தீர்ப்பளிக்க கேட்டுக் கொண்டது. அதை ஏற்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. 1987ஆடி29ந் திகதிய இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி வடக்கும் கிழக்கும் ஒரு நிருவாக அலகாக இருக்கும் எனவும் 1988 மார்கழி 31க்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் ஒரு மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பை நடத்தி அவர்கள் வடக்கோடு இணைய சம்மதமாயின் நிரந்தரமாக சட்டரீதியாக இணைக்கலாம் எனவும் கூறப்பட்டிருந்தது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி அதையே வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தி ஒரே சபையாக தற்காலிகமாக இயங்கச்செய்தார். இந்தப் பிரகடனம் சட்டவலுவற்றது என்பது உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பாக அமைந்தது. அத்தீர்ப்பின் பிரகாரம் 2007ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதியிலிருந்து வடக்கிற்கு கிழக்கிற்கு என இரு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் 2008டில் தேர்தல் நடத்தப்பட்டு மாகாண சபை இயங்க ஆரம்பித்தது. வடக்குக்கு 2013ம் ஆண்டே தேர்தல் நடந்து மாகாண சபை உருவாகியது.

**சண்டையும் சிக்கின் குனியாவும்**

2006 சித்திரை 20ந் திகதி புலிகளமைப்பு உத்தியோகபூர்வமாக பேச்சுவார்த்தையிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தாலும் ஜெனீவா ஒஸ்லோ ஆகிய நாடுகளில் கூடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தபோதும் சில சமயம் வருகை வரவில்லை வருகை தந்திருந்தபோது பயனுள்ள எதுவும் நடைபெறவில்லை. அவர்களின் முழுக் கவனமும் தாக்குதல்கள் நடத்துவதிலேயே பதிந்திருந்தது. 2006 சித்திரை 23 அன்று சிங்கள சிவிலியன்கள் விவசாயிகள் தாக்கப்பட்டிருந்தார்கள். இது ஐரோப்பிய யூனியன் புலிகளமைப்பை தடை செய்ய வழிவகுத்தது. இதனால் ஐரோப்பிய யூனியன் நாடுகளில் புலிகளின் சொத்துக்கள் முடக்கப்பட்டன. கெபிற்றிகொல்லாவ பஸ் தாக்குதலில் பிள்ளைகள் உட்பட 64 சிங்கள பொது மக்களின் இறப்பு மாபெரும் மனித உரிமை மீறலாக கவனிக்கப்பட்டது. 2007ல் முழு அளவில் யுத்தம்

ஆரம்பமாகியிருந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள மக்களுக்கு ஒரு பக்கம் கொழும்பிலிருந்து வரும் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு மறுபக்கம் சிக்கின் குனியா நோய் என அல்லல்பட்ட வாழ்க்கையாகியது.

அரசாங்கமும் பல மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டு நாட்டில் ஒருவித பயங்கரமான சூழ்நிலை உருவாகியிருந்தது. நீதிக்குப் புறம்பான படுகொலைகள் கப்பம் கோரி ஆட்கள் கடத்தப்படல், கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் ஊடகவியலாளர்களை கொலை செய்தல், கடத்தப்பட்டு சித்திரவதை செய்தல், காணாமல் ஆக்குதல், ஊடக நிறுவனங்கள் தாக்கப்படுதல், முறையற்ற கைதுகள், வெள்ளை வான் கலாச்சாரம் போன்று பலவிதத்தில் அரச பயங்கரவாதமும் தலைவிரித்தாடிய காலமாக மாறியிருந்தது.

(தொடரும்)